Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/65/2026**

# ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்பு நிறைந்த அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே! மற்றும் அன்பு இறைமக்களே

நம் அனைவரின் நெடுநாள் கனவாகிய மறைமாவட்ட பேராலயம் குறித்து ஒரு சில கருத்துகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். " படைகளின் ஆண்டவரே, உமது உறைவிடம் எத்துணை அருமையானது" என்று தாவீது அரசர், அதுவரைக்கும் கட்டி எழுப்பப்படாத இறைவனின் திரு உறைவிடத்தை, மனக்கண்களால் கண்டு, அதனுள் அமர்ந்திருந்த அந்த ஆனந்தத்தை எடுத்தியம்புகிறார். ஆண்டவர் அறிவித்தபடியே தாவீது அரசரின் மகன் சாலமன் ஆண்டவருக்கான கோயில் பணிகளை துவங்கும் முன், "எம் கடவுள் எல்லா தெய்வங்களையும் விட மிகப்பெரியவர் எனவே நான் கட்டப் போகிற கோவிலும் மிகப் பெரியதாயிருக்கும்" (2குறிப்பேடு2:5) எனக்கூறி உயர்வகை மரங்களாலும் பசும் பொன்னாலும் இறைவனின் இல்லத்தை மிக எழிலாக கட்டி முடித்து இறைவனுக்கு அர்ப்பணிக்கிறார்.

ஆக, உன்னத இறைவன் தனது உடனிருப்பை, ஆற்றலை, மேன்மையை, மாட்சியை எளிய மனிதர்களாகிய நமக்கு வெளிப்படுத்தும் இடம் ஆலயம். பலிப்பொருளாகி, நமக்காக பலியாகி, தன்னையே உணவாக்கி, தன் அளப்பரிய அன்பை இறைவன் வெளிப்படுத்தும் இடம் ஆலயம். இறைவனின் அன்பு பலியில் கலந்து இறை அனுபவத்தை மனிதன் பெற்றுக் கொள்ளும் இடம் ஆலயம். இத்தகு உன்னதமான தேவாலயமே நம்மை ஒன்றிணைக்கிறது இறைவனோடு ஒன்றாக்குகிறது. ஒவ்வொரு பகுதிகளிலும் அமைந்திருக்கும் இத்தேவாலயங்களை நாம் பங்கு கோயில் என்கிறோம். அத்தேவாலயத்தில் பணிபுரியும் அருட்தந்தையைப் பங்குத்தந்தை என அழைக்கிறோம். இப்படிப்பட்ட பல பல பங்குகள் ஒன்றிணைந்து அமைவதே மறை மாவட்டம். இம்மறை மாவட்டத்திற்கான தேவாலயத்தை பேராலயம் அல்லது கதீட்ரல் அல்லது அரியணைக் கோயில் என அழைக்கிறோம். இதுவே அந்த மறை மாவட்ட ஆயரின் கோயில்.

1960 ஆம் வருடத்தில் கன்னியாகுமரி மிஷனாக உருவாக்கப்பட்டு, 1997ஆம் ஆண்டு தக்கலை மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டு, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்களில் இறைபணி செய்து வெள்ளி விழா கண்ட நம் மறைமாவட்டத்திற்கென, மறை மாவட்ட ஆயர் தனதெனக் கருதி இறைபணி செய்வதற்கென இதுவரையிலும் ஒரு பேராலயம் அமையாதிருப்பது சற்று நெருடலாகவும் ஒரு குறையாகவுமே அமைந்துள்ளது. ஆனால், நம் மறைமாவட்ட பேராலயத்திற்கான முன்னெடுப்புகள் நம் மறை மாவட்டத்தின் முதல் ஆயரும் கர்தினாலுமாகிய மார்.ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களால் அப்போதே தொடங்கப்பட்டதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பேராலயக் கனவு நனவாக அவர் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டதனை நாம் மறந்து விடக்கூடாது. முதன்முதலாக படந்தாலுமூடு பகுதியில் பேராலயம் அமைப்பதற்கென சுமார் ஒரு ஏக்கர் நிலம் வாங்கப்பட்டாலும் பின்னர் பல்வேறு காரணங்களால் அது கைவிடப்பட்டது. பின்னர் பரைக்கோடு பகுதியில் ஒரு ஏக்கருக்கு மேல் நிலம் வாங்கப்பட்ட

போதிலும் பேராலயம் அமைக்கப்பட நெடுங்காலமாக அனுமதி கிடைக்காத நிலையில் அதுவும் கைவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து மூன்றாவதாக கழுவன்திட்டை பகுதியில் பேராலயம் அமைப்பதற்காக சிறிது சிறிதாக நிலம் வாங்கி சேர்க்கப்பட்டு, பேராலய பணிகள் துவக்கப்பட்டு, தரைத்தளம் முடிக்கப்பட்ட நிலையில் மறைமாவட்டத்தில் பல்வேறு தரப்பினரால் எழுப்பப்பட்ட பல்வேறு கருத்துகளின் அடிப்படையில் அந்த முயற்சியும் படிப்படியாக கைநழுவிச் சென்றது. ஆகவே அதில் எழுப்பப்பட்ட ஆலயம் கழுவன்திட்டை பங்கிற்காக அர்ப்பணிக்கப்பட்டது. தொடக்க முதலே எடுக்கப்பட்ட பேராலய முயற்சிகள் தொடர் தோல்வியில் முடிந்தாலும், நமது மறைமாவட்ட மறைபரப்பு பணிகளில் எள்ளளவும் குறைவு ஏற்படாது நம் மறைபரப்புத் தளங்களின் எல்லைகள் விரிவடைந்து சென்றன.

இச்சூழலில் மறைமாவட்ட பேராலயம் குறித்த எண்ணங்கள், கருத்துகள், அதன் தேவை குறித்த கவலைகள் இவை அனைத்தும் மறைமாவட்ட அருட்தந்தையர் பேரவை, அருட்பணி பேரவை மற்றும் மக்கள் பிரதிநிதிகள் வாயிலாக பல்வேறு தருணங்களில் ஆயரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு கலந்தாலோசனைகள் நிகழ்த்தப்பட்டு அதுகுறித்த விவாதங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக நமது மறை மாவட்டத்திற்கு உட்பட்ட சூசைபுரத்தில் மறைமாவட்ட பேராலயம் அமையப்பெறும் என இறுதி முடிவு தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே, பேராலயம் அமைக்கப்பட முதல் முயற்சியாக சூசைபுரத்தில் ஏற்கனவே இருந்த நிலத்தின் அருகாமையில் இருந்த நிலங்கள் வாங்கி சேர்க்கப்பட்டன. மேலும் பேராலயம் கட்டுவதற்கான அரசின் முறையான அனுமதியும் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே பெறப்பட்டது. எனினும் பேராலய கட்டுமான பணிகள் எதுவும் துவங்கப்படவில்லை. ஒரு சில ஆண்டுகளுக்கே இந்த அனுமதி செல்லுபடியாகும் என்னும் நிலையில், பேராலய பணிகள் இன்னும் துவங்காதிருப்பது பேராபத்தாகிவிடும் என்பதை உணர்ந்து ஆயரின் தலைமையில் பேராலயக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அக்குழுவின் ஒரு சில

**பரிந்துரைகள் பின்வருமாறு:**

* மறை மாவட்ட பேராலயம் மறை மாவட்ட மக்களுக்கானது. ஆகவே மறைமாவட்ட மக்களின் பங்கேற்பு இதில் அதிகம் இருக்க வேண்டும்.

* பேராலய அடிக்கல் நாட்டப்பட்டப் பின்னர் பேராலய பணிகள் தொடங்கப்பட்டு வேலைகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் அதற்கான நிதி திரட்டப்பட வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்களின் அடிப்படையில் ஆண்டவரால் குறிக்கப்பட்ட வெற்றியின் நாளாகிய **பிப்ரவரி 17 அன்று மாலை 5 மணிக்கு புனித சூசையப்பர் பேராலய அடிக்கல் நாட்டு விழா** சூசைபுரத்தில் வைத்து நடைபெற உள்ளது என்பதனை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அதற்கு முன்னதாக மாலை 4 மணி முதல் 5 மணி வரை ஆயர் தலைமையில் நற்கருணை ஆராதனை நடைபெறும். அக்களிப்போடும் அகமகிழ்வோடும் நாம் துவங்கும் இப்புதிய முயற்சிக்காக இச்சுற்று மடல் கிடைத்த நாளிலிருந்து நாம் அனைவரும் இணைந்து இறைவனிடம் ஜெபிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் நாம் அனைவரும் ஒன்று கூடி இறைவனை ஆராதிக்க இறைவன் தரும் இப்பேராலய பணிகளில் நமது பங்கேற்பும் இருப்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகிறது. இதற்காக பேராலயக் குழுவினரோடு நானும் உங்களை கேட்டுக் கொள்வது என்னவென்றால்

* தினந்தோறும் உங்கள் தனி ஜெபத்திலும் குடும்ப ஜெபத்திலும் ஆலய வேண்டுதல்களிலும் நம் பேராலய பணிகளுக்காக ஒருமித்த உள்ளத்தோடு இறைவேண்டல் செய்யுங்கள்.

* பிப்ரவரி 17 அன்று அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்க உங்கள் பங்கு பேரவை நிர்வாகிகளை தவறாது அனுப்பி வையுங்கள்.

* மறைமாவட்ட மக்கள் அனைவரும் அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்க முடியாது எனினும் ஒவ்வொரு தனி நபரின் பங்கேற்பும் இருக்கும் வகையில் **பிப்ரவரி 15 ம் தேதியன்று எடுக்கப்படும் பேராலய சிறப்பு காணிக்கை** யில் உங்களின் ஒரு நாள் ஊதியத்தை மனநிறைவோடும் மன மகிழ்வோடும் வழங்குங்கள்.

* அக்காணிக்கையினை அடிக்கல் நாட்டு விழா அன்று நடைபெறும் ஜெப வழிபாட்டில் உங்கள் பங்குத்தந்தையும் கைக்காரர்களும் கொண்டு வந்து ஆயர் அவர்களிடம் ஒப்படைப்பார்கள்.

* பேராலயம் கட்டப்பட மரம்,மணல்,சிமெண்ட், கம்பி ,கருங்கல் ,செங்கல், கண்ணாடி போன்ற பொருட்களை கொடுக்க நினைப்பவர்களும் திருச்சிலுவை, திருமுழுக்குத் தொட்டி, ஒப்புரவு அருட்சாதனை கூண்டு, சிலுவைப்பாதை படங்கள், புனிதர்களின் சொரூபங்கள், ஒலிப்பெருக்கி, ஒலிவாங்கி, மின்விசிறிகள்,குத்துவிளக்கு, திரைச்சீலை, அலங்கார விளக்குகள், அலங்கார பொருட்கள் என்பன போன்ற பொருட்களாக கொடுக்க விரும்புபவர்களும் அதனைக் குறித்து தெரிவிக்கலாம்.

* ஒவ்வொரு மறைவட்டத்திற்குமாக உருவாக்கப்படும் பேராலய நிதிக்குழு, அந்தந்த மறைவட்டத்திற்குட்பட்ட ஒவ்வொரு பங்குகளிலிருந்தும் நிதி திரட்டும் பணியினைச் செய்யும். அன்பான இறைமக்களே, மனமுவந்து நீங்கள் வழங்கும் கொடைகள் ஒவ்வொன்றிற்கும் நிச்சயமாக இரு மடங்கு நன்மையை இறைவன் உங்களுக்கு அருள்வார். ஆகவே, ஒருமித்த உள்ளத்துடன் நாம் தொடங்கவிருக்கும் இப்பணிகளில் இறைவன் கூடவே துணை இருப்பார் எனும் நம்பிக்கையோடு நமது மறைமாவட்ட பேராலயத்திற்கான விண்ணப்பங்களை நன்றியோடும் புகழ் பாடலோடும் இறைவனுக்கு ஏறெடுப்போம் இறை வேண்டலில் இணைந்திருப்போம். அனைவருக்கும் அன்பின் ஆசிகள் அன்புடன்,

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
27.01.2026

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்டஆயர்

---

*குறிப்பு: இச்சுற்றுமடலை* பிப்ரவரி 01, 2026 ஞாயிற்றுக்கிழமை *அனைத்து பங்குகளிலும்* வாசிக்க வேண்டும்.